[1981 பிப்ரவரி 28

திரு. ஆர். டி. கோபாலன்: தலைவரவர்களே, பரிசுச் சீட்டு வருமானத்தின் மூலமாக வெள்ளத்தினால் பாதிக்கப் பட்ட பகுதிகளுக்கு ஏதேனும் உதவி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவ ரவர்களே, நான் முதலிலே சொன்னபடி புயல் மற்றும் வெள்ள நிவாரண காரியங்களுக்காக ஓரளவுக்கு இதிலிருந்து நிதி தரப் பட்டு வருகிறது. ஆனால் எவ்வளவு தரப்படுகிறது என்பதற்கு தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தர இயலும்.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, பொதுவாக பரிசுச் சீட்டின் மூலம் வருகின்ற வருமானம் குறைந்துகொண்டு வருவதாலும், பரிசுச் சீட்டுகளை வாங்குகின்ற ஆர்வம் மக்க ளிடையே குறைந்து கொண்டு வருவதாலும் இப்பரிசுச் சீட்டு மக்களை ஈர்க்கின்ற வகையிலும் அதன்மூலம் வருவாயைப் பெருக்குகின்ற வகையிலும் அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவ ரவர்களே, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. எல்லா மாநிலங்களும் இப்படிப்பட்ட முயற்சி களில் ஈடுபட்டு வருகின்றன. பல மாநிலங்களிலிருந்து பரிசுச் சீட்டுகள் இங்கே நுழைகின்றன. எந்தெந்த மாநிலங்கள் நம் முடைய பரிசுச் சீட்டு விற்பனைக்கு அனுமதி அளிக்கின்றதோ அந்தந்த மாநிலங்களின் பரிசுச் சீட்டுகளை மட்டும் இங்கே அனுமதிப்பது என்று விதி வைத்திருக்கிறோம். ஆகவே நாம் நம்முடைய பரிசுச் சீட்டு திட்டத்தை நிறுத்திவிட்டாலும் மற்ற மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் நுழைந்துவிடும். ஆகவே அகில இந்திய அளவில் இந்தப் பிரச்சினை இருக்கின்றது. நாம் இதிலே ஓரளவுக்கு நிதி திரட்டுகின்ற முயற்சியிலே ஈடுபட்டு வருகிறோம். அந்த வகையிலே 'பம்பர்'' அதாவது 10 லட்சம் ரூபாய் திட்டம் என்பதை நாம் இரண்டு தடவைகள் தான் நடத்தினோம். ஆனால் மற்ற மாநிலங்களில் வாரத்திற்கு ஒரு முறை கூட இந்த மாதிரி நடத்துகிறார்கள். ஆகவே நாமும் அதை 15 நாட்களுக்கு ஒருமுறை நடத்தலாமா என்று முயற் சித்து வருகிறோம். அதிலே வெற்றி கிடைத்தால் தொடர்ந்து அவ்வாறு செய்யலாம்.

குடும்பக் கார்டுகளுக்கு கோதுமைப் பண்டங்கள் விநியோகம்.

*வினா எண். 303—திரு. கு. ரமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) குடும்பக்கார்டுகளுக்கு ரவை, மைதாமாவு போன்ற கோதுமைப் பண்டங்களை நியாய விலைக் கடைகள் மூலமாக அரசு நிர்ணயித்த விலைகளில் விநியோகிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதா ?

1981 பிப்ரவரி 28]

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் அது நடைமுறைக்கு வரும்?

(இ) முழுக் கோதுமையையும் இக்கடைகள் மூலம் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) குடும்பக்கார்டுகளுக்கு ரவை, மைதா, முழுக்கோதுமை போன்றவை ஏற்கெனவே நியாயவிலைக் கடைகள் மூலம்விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடம் இல்லை.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, குடும்பக் கார்டுகளுக்கு கோதுமை எந்த அளவுக்கு விநியோகிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றதா? பல பகுதிகளில் கோதுமை கிடைக்க வில்லை என்ற குறை இருக்கின்றது. ஆகவே நமக்கு மத்திய அரசிடம் இருந்து கிடைக்கின்ற மாதாந்திர, வருடாந்திர கோட்டா எவ்வளவு? தமிழ்நாட்டிலுள்ள கோதுமை அரைக்கும் ஆலைகள் மாதத்தில் 15 அல்லது 20 நாட்கள் வேலையில்லாமல் இருக்கின்றன. அவர்களுக்கு அரசு எவ்வளவு விநியோகிக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு 50 ஆயிரம் டன் கோதுமையை ரவா, மைதா, போன்ற கோதுமைப் பொருட்கள் தயாரிப்பதற்கு மத்திய அரசு வழங்குகின்றது. குடும்பக் கார்டுகளுக்கு வழங்குவதற்காக 3,000 டன் கோதுமையை மத்திய அரசு தருகின்றது. இந்த 3,000 டன் கோதுமையும் நியாய விலைக் கடைகளின் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மைதா, ரவை ஆகியவை குடும்ப கார்டு ஒன்றுக்கு 5 கிலோ வீதம் அளிக்கப்பட்டு வருகின்றன. முழுக் கோதுமை கார்டு ஒன்றுக்கு 10 கிலோ வீதம் அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும் எல்லா கார்டுதாரர்களும் எல்லா இடத்திலேயும் கோதுமை வாங்குவதில்லை. ஆகவே எங்கெங்கு தேவை இருக்கிறதோ அங்கங்கு அதற்கான கோட்டா ஒதுக்கி வழங்கப்படுகின்றது. ஆகவே எங்கேயாவது பற்றாக்குறை இருக்கின்றது அல்லது கோதுமை கிடைக்கவில்லை என்ற தகவலைத் தந்தால் அங்கே அவை கிடைக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் செய்யலாம்.

[1981 பிப்ரவரி 28

திரு. சி. கோபால்: தலைவரவர்களே, பல கிராமங்களில் குடும்பக் கார்டுகளே இப்போது இல்லை என்ற நிலைமை இருந்து வருகின்றது. ஆகவே கிராமங்களிலே உள்ள மக்களுக்கு குடும்பக் கார்டுகள் அதிகமாக கிடைக்கின்ற ஒரு சூழ்நிலையை அரசு ஏற்படுத்தித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதிகமாக கார்டுகள் கொடுப்பது என்கிற பிரச்னை இல்லை. ஆனால் ஏற்கெனவே குடும்பக் கார்டுகள் அவர்களிடத்திலே இல்லை என்று நிரூபித்து அதற்கான முறைப்படி, முறையீடு செய்து கொண்டால், அதைப்பற்றிக் கண்டறிந்து, ஆங்காங்கே உள்ள அந்த அதிகாரிகள் குடும்பக் கார்டுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்கள்.

திரு. ... சுந்தரம்: தலைவர் அவர்களே, குடும்பக் கார்டுகளுக்கு மைதா, ரவைகள் வழங்கப்படுவதைப் போல, சில சிறு தொழில்களுக்கு மைதா போன்றவை மூலப் பொருளாக இருக்கின்றனவே—அதுபற்றி அரசுக்குத் தெரியுமா? அந்த சிறு தொழில்கள் தேவையான மைதா கிடைக்காமல் பாதிக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா? ஆகவே உடனடியாக அப்படிப்பட்ட சிறு தொழில்களுக்கு மைதாவை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. தனியாக கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசு அது பற்றி பரிசீலிக்கும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலை இருப்பதால், குடும்பக் கார்டுகளுக்கு வழங்கப்படுகிற உணவுப் பொருள்களை அதிகரித்து வழங்க உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி மைதா, ரவை பற்றியது. உட்காருங்கள்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மைதா, கோதுமை வினியோகத்தை அரிசியை அதிகமாகக் கொடுக்கும்போது அரசு நிறுத்திவிடுவதாகத் தெரிகிறது. அப்படி இல்லாமல் தொடர்ந்து இவைகளை நியாய விலைக்கடைகளில் விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1981 பிப்ரவரி 28]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல தேவையை உணர்ந்து ஆங்காங்கே உள்ள நியாயவிலைக் கடைகளில் கேட்கப் படுகிற டிமாண்டின் அடிப்படையில்தான் நுகர் பொருள் வாணிபக் கழகத்தினர் சப்ளை செய்கிறார்கள். தேவையை உணர்ந்து அவர்கள் அதிகமாக கேட்டால் அது குறித்து சப்ளை செய்யப்படும்.

இதில் கோதுமையைப் பொறுத்த வரையில் மத்திய அரசு முதலிலே 63,000 டன்கள் கொடுத்துக் கொண்டிருந்தது. இப் போது இருக்கும் நிலைமைகளை கணக்குப் பார்த்து 30,000 டன்கள் தான் வழங்குகிறார்கள். அதை நாம் பகிர்ந்து அளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடும்பக் கார்டுகளுக்கு அத்தியாவசியப் பொருள் களை வினியோகம் செய்வதற்காக சிவில் சப்ளைஸ் கார்ப்பொ ரேஷன் மூலமாக பல கடைகள் ஆங்காங்கே இருக்கின்றன. பல இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடைகள் திறக்கப் பட்டிருக்கின்றன. சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் மூல மாக திறக்கப்பட்டிருக்கிற கடைகளில்தான் கோதுமை, ரவா மைதா மற்றும் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் கிடைக் கின்றன. ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக திறக்கப் பட்டிருக்கிற கடைகளில் சர்க்கரை, மண்ணெண்ணெய் தவிர மற்றப் பொருட்கள் இந்த குடும்பக் கார்டுகளுக்கு கிடைப்ப தில்லை. ஆகவே எல்லா கடைகளிலும் கூட்டுறவுச் சங்க மானாலும், சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனாக இருந் தாலும், எல்லாக் கடைகளிலும் மக்களுக்குத் தேவையான இந்த அத்தியாவசியப் பொருள்கள் கிடைப்பதற்கு வழி வகைச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் குடும்பக் கார்டுகளுக்கு சில இடங்களில் நுகர் பொருள் வாணிபக் கழக நியாயவிலை அங்காடிகள் மூலமாகவும், சில இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களால் நிறுவப் பெற்ற அங்காடிகள் மூலமாகவும் மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கம் மூலமாகத் திறக்கப்பட்டிருக்கும் அங்காடிகளுக்கும் நுகர் பொருள் வாணிபக் கழகம் எல்லா அத்தியாவசிய உணவுப் பொருள் களையும் வழங்குகிறது. ஆகவே அவர்களிடத்திலும் அவைகள் இருந்தாக வேண்டும். அப்படி இல்லை என்றால், குறிப்பிட்டு கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன் ; பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே கூட இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்க அங்காடிகள் இருக்கின்றன. எங்கள் மாவட்டத்திலே வைகை கடைகள்

என்று சொல்வோம். அங்கே மைதா கோதுமை போன்ற பொருள்கள் கொடுக்கப்படுவதே இல்லை. காரணம் கேட்டால், வருகிற பணம் ஊழியர்களுக்கு சம்பளம் தரவே சரியாக இருக்கிறது. மேற்கொண்டு பணம் கட்டி பொருள்களை வாங்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஓவர் டியூவாகவும் இருக்கிற காரணத்தினால் கடனும் பெறவசதி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அரசு அந்தக் கடனைத் தீர்த்து, கிராமங்களில் உள்ள மக்களுக்கு எல்லா அத்தியாவசியப் பொருள்களும் கிடைக்க ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர், அவர்களே, அது பற்றி விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்குமேயானால், தக்கபடி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், தக்க நிறைபாடுகள் செய்யும் முயற்சியை அரசு எடுக்கும்.

திரு. பாபுஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கார்டுகளுக்கு அத்தியாவசியப் பொருள்கள் சரிவர கிடைப்பதில்லை என்பது ஒருபுறம் இருக்க, குடும்பக் கார்டுகளே சரிவர மக்களுக்குக் கொடுக்கப் பெறவில்லை என்கிற குறை இருக்கிறது. ஏன் கொடுக்கவில்லை என்று காரணம் கேட்டபோது வாக்காளர்ப் பட்டியல் பதிவு நடந்துக் கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகுதான் சீரியல் நம்பர்படி கவர்ன்மெண்ட் பிரஸ்ஸில் அச்சடிக்கப் பெறவேண்டும் என்று சொல்கிறார்கள். இதனால் நிறைய குடும்பக் கார்டுகள் வினியோகிக்கப் பெறாமல் அலுவலகத்திலேயே வைக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து உடனடியாக நிவாரணம் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, குடும்பக் கார்டு இப்போது வழங்கப்பட்டு, ஒவ்வொரு குடும்பமும் பெற்று வருகிறது. ஆனால், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்லுவதால், அல்லது தொலைந்து விட்டால் அதற்கான அத்தாட்சியைக் காண்பித்து பெற்று வருகிறார்கள். ஆனால், சிலபேர்கள் 2, 3, கார்டுகள் அல்லது 4,5 கார்டுகள் கூட வைத்திருக்கின்ற சூழ் நிலை இருக்கின்ற காரணத்தினால், அதற்கான நடவடிக்கைகள் ஆங்காங்கே எடுக்கப்பட்டு வருகின்றது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு தீவிரமாக ஆராய்ந்து, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், குறிப்பிட்ட இடங்களில் இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன என்பதை கவனத்திற்கு கொண்டு வந்தால், அவைகளைக் கண்டறிந்து நியாயமான அடிப்படையில் இந்தக் கார்டுகளை வழங்குவதற்கு வழிவகை செய்யலாம்.